www.tamilarangam.net

# பெண்ணுரிமைகள் கண்ணோட்டம்

## சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் மட்டக்களப்பு.

மடல் - 04 ♀♀♀ 2002 - 2003 தொகுப்பு

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் சமூகத்தில் பெண்களது உரிமைகள் மீறப்படுவதை எடுத்துக்காட்டி அதன் மூலம் அவர்களது உரிமைகள், பாதுகாப்பை வற்புறுத்தவும். சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் பற்றிய உரையாடலைத் தொடங்குவதை நோக்கமாகவும் கொண்டு பெண்ணுரிமைகள் கண்ணோட்டம் என்னும் நான்காவது மடலை வெளியிடுகின்றது. இவ் வன்முறைச் சம்பவ தகவல்கள் 2002ம் -2003ம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சூரியா நிலையத்தினால் சேகரிக்கப்பட்டவையாகும். எனினும் மட்டக்களப்பு மாவட்டத்தின் சகல பகுதிகளையும் இத் தகவல் சேகரிப்பு உள்ளடக்கவில்லை. இத் தகவல் சேகரிப்பிற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்பு கிடைக்க வேண்டும் என நாம் விரும்புகின்றோம்.

-ஆசிரியை-

## பொருளடக்கம்


- பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் - 2002
- வன்முறைகளற்ற சமாதானம் வேண்டும்
- சிறுமியர் மீதான பாலியல் வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் - 2002
- சக்தி குழு
- பெண்களுக்கெதிரான வன்முறைச் சம்பவங்கள் - 2003
- வஞ்சகர் வாழும் பூமி
- சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் - 2003
- வழக்குகளும் கேள்விகளும்
- மொட்டுக்கள் மலரட்டும்
- பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான செயல்வாதம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வன்முறைச் சம்பவங்களின் தன்மைகளை கீழுள்ளவாறு வகைப்படுத்தலாம்.

சித்திரவதை, துன்புறுத்தல்- (சிறுமிகள் - பெண்கள்)

பாலியல் தொந்தரவுகள் - (சிறுமிகள் - பெண்கள்)

பாலியல் வல்லுறவு - (சிறுமிகள் - பெண்கள்)

சிறுவயது திருமணம் - (சிறுமிகள் )

கடத்தல் - ( சிறுமிகள் - பெண்கள்)

குழந்தைத் தாய்மார்

கொலை

சிறுமிகள் வேலைக்கு அமர்த்தப்படல்

தொல்லைகொடுத்தல் என்பது, எவரேனும் ஒருவரை, அவரது அல்லது அவளது அனுமதியின்றி நகைப்புக்கோ, அவமானத்துக்கோ நிந்தனைக்கோ உட்படுத்தி ஆத்திரமூட்டுவதாகும்.




குட்டிக்கொண்டே இருக்கும்
கும்பல்கள் பல
குனிந்து கொண்டே இருக்கும்
மூடர்கள் பலர்
முட்டாள் தனமாய் நாம்

வாழ்ந்தது போதும்
சமூகத்தின் அர்த்தமற்ற
சட்டங்களை
கட்டியே வைத்திடுவோம்

விஜிகலா

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/நடை பெற்ற முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 22.12.2002 | 18 | கொம்மாதுறை | அக்கிராம அபிவிருத்திக் குழுவினர் | வீட்டில் | செங்கலடி பாடசாலையில் கல்வி கற்ற சிறுமி வீட்டுத் தகராறு காரணமாக அடித்து சித்திரவதை செய்யப்பட்டு இனந் தெரியாதோரால் கடத்திச் செல்லப் பட்டார். | தாய் தந்தையால் தேடப்படுகிறார் |
| மட்/வைத்திய சாலை | 28.11.2002 | 38 | இருதயபுரம் | கணவன் பிரான்சிஸ் | வீட்டில் | கணவன் தினமும் அடித்துத் துன்புறுத்தல் வீட்டில் உள்ள பொருட்களை விற்றல் | வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் மட்/பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது |
| சூரியா | 26.12.2002 | 29 | மட்டக்களப்பு | கணவன் | வீட்டில் | கணவன் காரணமின்றி அடித்துத் துன்புறுத்துவார் | மட்/பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது |
| சூரியா | 12.09.2002 | 35 | ஆரையம்பதி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் அடித்துத் துன்புறுத்தியதால் தலை, கை உடைந்து மட்/ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் | காத்தான்குடி பொலிஸ் விசாரனை மேற் கொண்டது |
| காத்தான்குடி பொலிஸ் | 23.04.2002 | 30 | ஆரையம்பதி | கணவன் புலேந்திரன் | வீட்டில் | கர்ப்பமாக இருக்கும் மனைவியை தினமும் சீதனம் கேட்டுத் துன்புறுத் தியுள்ளார் | காத்தான்குடி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரனை மேற்கொள் ளப்பட்டது |
| மட்/ நீதி மன்றம் | 10.02.2002 | 22 | கூளாவடி | கணவன் கிழக்கு பல்கலைக் கழகமாணவன் | வீட்டில் | தினமும் சீதனம் கேட்டு துன்புறுத் தியுள்ளார் | வழக்கு பதிவுசெய்யப் பட்டது |
| சூரியா | 23.12.2002 | 42 | காத்தான்குடி | கணவன் | வீட்டில் | மனைவியின் பெயரில் உள்ள காணியை விற்றுத்தரும்படி கேட்டு அடித்துத் துன்புறுத் தியுள்ளார் | பொலிஸ் விசாரனை இடம் பெற்றது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| தபால் மூலம் | 04.06.2002 | - | மீராவோடை | பாட்சாலை ஆசிரியர் | வீதியில் | மக்கள் முன்னிலையில் ஆசிரியர் இப் பெண்ணை கீழ்த்தரமான வார்த்தையால் ஏசி அடிக்க முனைந்தார் | கல்வித் திணைக் களத்திடம் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| அவுஸ்ரேலியா நிறுவனம் மூலம் | 11.04.2002 | 18 | திருப்பெருந் துறை | கணவர் | கொழும்பில் | கொழும்பில் திருமணம் முடித்து கொடுக்கப்பட்ட பெண் கணவனது கொடுமை தாங்கமுடியாமல் தன்னை அழைத்துச் செல்லுமாறு தனது தாய், தந்தைக்கு அறிவித்துள்ளார். | |
| சூரியா | 24.02.2002 | 36 | மட்டக்களப்பு | கணவன் | வீட்டில் | ஆசிரியரான இந்தப் பெண்ணை கணவன் தொடர்ந்து கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்துள்ளார் குழந்தையையும் பலவந்தமாக கொண்டு சென்றார் | விவாகரத்து பதிவு செய்து தவனை இடம்பெறு கின்றது. |
| வைத்தியசாலை மூலம் | 11.10.2002 | 30 | ஜெயந்திபுரம் | கணவன் ராஜகாந்தன் | வீட்டில் | கணவன் வேறு திருமணம் முடித்து இப்பெண்ணின் சீதன வீட்டில் வாழ்ந்து கொண்டு இப்பெண்ணையும் அடித்து சித்திரவதை செய்து, வீட்டைவிட்டு துரத்தியுள்ளார். பெண், வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். | பொலிசில் முறைப்பாடும் செய்யப்பட்டு மட்/நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் - 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 21.10.2002 | 25 | இருதயபுரம் | கணவன் லோகநாதன் | வீட்டில் | கணவன், சீதனம் கொடுத்த காணியை விற்றுத் தரும்படி மனைவியை அடித்துத் துன்புறுத்தியதுடன் தற்போது பிள்ளைகளையும், மனைவியையும் விட்டுப் பிரிந்து தாய் வீட்டில் வாழ்கிறார். | |
| மட்/ வைத்திய சாலை | 14.10.2002 | 40 | தாளங்குடா | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் மது பாவித்து விட்டு அடித்துத் துன்புறுத்தியதால் முகத்திலும், கண்ணிலும் பலத்த காயங்களுக்குள்ளான மனைவி மட்/வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் | தாபரிப்பு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரனை இடம்பெற்று வருகிறது. |
| சூரியா | 14.10.2002 | 21 | கொக்குவில் | அந்தக் கிராமத்து 45வயது மதிக்கத் தக்க நபர் | அயல் வீட்டில் | 45 வயது மதிக்கத்தக்க கொக்குவில் கிராமத்து நபரால் பாலியல் வல்லுற வுக்கு உள்ளாக் கப்பட்டார். | மட்/நீதி மன்றில் வழக்கு தாக்கல் செய்யப் பட்டுள்ளது. |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 18.08.2002 | 30 | சத்துருக் கொண்டான் | கணவன் ஜெயானந்தம் | வீட்டில் | மனைவியையும் பிள்ளையையும் அடித்து துன்புறுத்தியதால் தனது தாயிடம் பிள்ளைகளை விட்டு விட்டு மனைவி மறைந்து வாழ்கிறார் கணவன் இப்பெண்ணைத் தொடர்ந்தும் பிரச்சனைக்குட் படுத்தி வருகிறார். | பராமரிப்பு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தவனை போடப்பட் டுள்ளது |
| மட்/ பொலிஸ் ஊடாக | 05.12.2002 | - | சத்துருக் கொண்டான் | கணவன் | வீட்டில் | கணவன், மனைவியையும் பிள்ளையையும் அடித்து சித்திரவதை செய்ததுடன் இப் பெண் வெளிநாடு சென்று உழைத்த காசையும் உடமைகளையும் விற்றுள்ளார். | பொலிஸ் விசாரனை இடம்பெற்று வருகிறது. |
| சூரியா | 19.06.2002 | 21 | கருவப்பங்கேணி | கணவன் | வீட்டில் | கர்ப்பிணியாயிருந்த இவரை கணவன் தினமும் மது பாவித்து விட்டு அடித்துத் துன்புறுத்தியதால் வயிற்றிலிருந்த குழந்தை இறந்து பிறந்தது. மீண்டும் இவர் இரண்டாவது தடவை 4 மாதக் கர்ப்பிணியாக இருக்கும் போது கணவன் காலால் உதைத்ததால் குழந்தை கருவில் இறந்தது | |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/ பொலிஸ் மூலம் | 21.10.2002 | 32 | முறக்கொட் டான்சேனை | கணவன் விஜயகுமார் | வீட்டில் | கணவன் அடித்து துன்புறுத்தி அவமானப்படுத்தி வருகிறார். | பொலிஸாரால் விசாரனை மேற் கொள்ளப் பட்டுள்ளது. |
| மட்/வைத்திய சாலை | 27.11.2002 | 35 | ஓட்டமாவடி | கணவன் | - | கணவனின் பலத்த, தாக்குதலால் மனைவி காயத்திற் குள்ளாகி மட்/ வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளார் | |
| மட்/வைத்திய சாலை மூலம் | 09.07.2002 | 32 | கிரான்குளம் | கணவன் செல்வராஜ் | வீட்டில் | கணவன் தினமும் மது பாவித்து விட்டு மனைவியை அடித்துத் துன்புறுத்துகின்றார் 5பிள்ளைகளையும், பராமரிப்பதில்லை. இதனால் மனைவி புடவை வியாபாரம் செய்து பிள்ளை களைப் பராமரிக் கின்றார். | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. |
| மட்/ பொலிஸ் மூலம் | 18.05.2002 | 35 | கல்லடி வேலூர் | காத்தான் குடி பொலிஸ் | காத்தான் குடி பொலிஸ் நிலை யத்தில் | அயல் வீட்டுக்காரனுடன் பிரச்சனை காரணமாக பொலிசில் முறைப்பாடு செய்யப்போன நேரத்தில் தகவலை சரியாகப் பதிவு செய்யுமாறு பொலிசாரை அப்பெண் கேட்ட போது பொலிசார் அப் பெண்ணை ஆயுதத்தால் பாரதூரமாக தாக்கியுள்ளனர் | A.S.Pயிடம் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம் பெற்றது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 01.04.2002 | 34 | மட்டக்களப்பு | பக்கத்து வீட்டாரான ரவி | அவரது வீட்டில் | பக்கத்து வீட்டு நபரான ரவி என்பவர் இவரது வீட்டில் புகுந்து தாக்கியதுடன் உடமைகளை எரித்துள்ளார். | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது. |
| மட்/பொலிஸ் மூலம் | 09.12.2002 | 32 | சின்ன ஊறணி | கணவன் ரெட்னசிங்கம் | அவரது வீட்டில் | திருமணம் முடித்த காலத்திலிருந்தே கணவனால் அடித்துச் சித்திரவதைக்குட்பட்டு இரண்டு தடவை வைத்தியசாலையில் சிகிச்சையும் பெற்றுள்ளார் | மட்/நீதி மன்றில் வழக்கு இடம் பெறுகிறது |
| சூரியா | 06.03.2002 | 22 | புதுக் குடியிருப்பு | கணவன் நேசராசா | வீட்டில் | திருமணம் முடித்து ஒரு மாதத்தில் இருந்து கணவன் சீதனம் கேட்டு அடித்து மனை வியை உடல் முழு வதும் பலத்த காயத்துக்குள்ளாக்கி யுள்ளார் இதனால் இவர் தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் பின் தனது தாய் வீட்டில் இருக்கும் போது மீண்டும் கணவனால் தாக்கப்பட்டுள்ளார். | காத்தான் குடி பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| மட்/ வைத் தியசாலை | 22.01.2002 | 21 | புன்னச் சோலை | கணவன் ராஜேஸ்வரன் | வீட்டில் | திருமணம் முடித்த நாளில் இருந்து கணவன் குடித்துவிட்டு கையால் அடித்துத் தும் ஆயுதங்களால் தாக்கியும் சித்திரவதை செய்துள்ளார். | மட்/ பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/வைத்திய சாலை | 03.01.2002 | 28 | மண்டூர் தம்பலவத்தை | இனந்தெரியாத ஆயுதக் குழுவினர் | சம்புநகர் அட்டா ளைச் சேனை | வயல் வேலைக்காக இரு சகோதரிகளும் சம்பு நகரில் தற் காலிகமாக இரவு தங்கியிருந்த போது இனந் தெரியாத ஆயுதக் குழுவினரால் சித்தி ரவதை செய்து ஆறு நபர்களால் பாலியல் வல்லுற வுக்கு உள்ளாகி யுள்ளனர் | கல்முனை நீதிமன்றில் வழக்கு விசாரனை இடம் பெறு கின்றது. |
| I.C.R.C | 09.03.2002 | 17 | மட்டக்களப்பு | கணவன் | வீட்டில் | கணவன், சீதனம் கேட்டு தினமும் அடித்து சித்தி ரவதை செய்து ள்ளார் அதைத் தாங்க முடியாமல் மனைவி, தாய் வீட்டில் வசிக்கிறார் | |
| சூரியா | 20.05.2002 | 24 | ஆரையம்பதி | கணவர் விக்னேஸ்வரன் | வீட்டில் | தினமும் சந்தேகப் படுவதும் மனை வியை அடித்துத் துன்புறுத்துவதும் தூசன வார்த்தை களால் ஏசுவது மாயுள்ளார் இதனால் மனைவி இவரிடமிருந்து பிரிந்து வாழ்கிறார் | |
| சட்டத்தரனி மூலம் | 09.04.2002 | 25 | இருதயபுரம் | கணவர் ரவிச்சந்திரன் பொலிஸ் உத்தியோ கத்தர் | வீட்டில் | பொலிஸ் உத்தியோகத்தரான கணவன் தினமும் அடித்து துன்புறு த்தியதுடன் நகை பொருட்களை விற்றதுடன் வீட்டை விட்டும் துரத்தியுள்ளார். | விவாகரத்து வழக்கு தொடர ப்பட்டு 50000/- பணமும் நகையும் மனை விக்கு கொடுக்க வேண்டும் என தீர்ப்புவழங்கப் பட்டுள்ளது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| தபால் மூலம் | 06.04.2002 | 30 | மட்டக்களப்பு | கணவர் மருத்துவர் | வீட்டில் | மட்/வைத்திய சாலையில் வேலை செய்யும் கணவன், தினமும் மனைவியை கொடுமைப் படுத்தல், அடித்தல், பாலியல் வல்லுறவு கொள்ளல் | |
| சூரியா | 10.03.2002 | 30 | ஆரையம்பதி | கணவர் யோகராஜா | வீட்டில் | கணவன் தினமும் காரணமின்றி அடித்து துன்புறுத்துவதுடன் பிள்ளைகளையும் விட்டுப் பிரிந்து வேறு திருமணம் முடித்துள்ளார் | |
| மட்/பொலிஸ் மூலம் | 18.07.2002 | 32 | முகத்துவாரம் | கணவன் சிங்கராஜா | வீட்டில் | கணவன் மது பாவித்துவிட்டு அடித்து துன்புறுத்தியதுடன் வேறு பெண்னை திருமணம் முடித்துள்ளார் | பொலிஸ் விசாரனை இடம்பெற்றது |
| சூரியா | 06.01.2002 | 35 | களுவாஞ்சிக்குடி | அலுவலக உத்தியோகத்தர் | அலுவலகம் | நிர்வாகப்பதவியில் இருக்கும் காரணத்தால் தினமும் தகாத வார்த்தைகளால் தாக்கப்பட்டார் | |
| சூரியா | 16.01.2002 | | ஊறணி | கணவன் சண்முக ரெட்ணம் | வீட்டில் | கணவன், மனைவியையும் பிள்ளைகளையும் தினமும் அடித்துத் துன்புறுத்தல் | |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம்/ முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 08.03.2002 | 36 | மட்டக்களப்பு | கணவர் தர்மலிங்கம் | வீட்டில் | கணவன், மது பாவித்துவிட்டு தினமும் மனைவியையும் பிள்ளைகளையும் அடித்து துன்புறுத்தி வீட்டைவிட்டு துரத்திவிட்டார் | வழக்கு பதியப்பட்டு விசாரனை நடை பெறுகிறது |
| மட்/பொலிஸ் மூலம் | 24.04.2002 | 36 | பார் வீதி | கணவர் நற்குணம் | வீட்டில் | கணவன், மனைவியை அடித்து துன்புறுத்தி யுள்ளார். வைத்திய சாலையில் மனைவி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார். | மட்/ பொலிசில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. |
| மட்/வைத்தி யசாலை | 24.09.2002 | 26 | களுவங்கேணி | வாழைச் சேனையைச் சேர்ந்த குமார் | குமார் வீட்டில் | ஏற்கனவே திருமணம் முடித்து மனைவியையும் பிள்ளைகளையும் பிரிந்துவாழும் இந்நபர் தனது உண்மையை மறைத்து இப் பெண்ணை திருமணம் முடிப்பதாக கூறி அவரை தன் வீட்டுக்கு ஏமாற்றி அழைத்துவந்து பாலியல் வல்லு றவுக்கு உட்படுத்தி யுள்ளார். | சம்மந்தப் பட்ட நபர் கைது செய்யப் பட்டு விசாரனை நடை பெறுகிறது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| பாதிரியார் மூலம் | 01.02.2002 | 19 | வாழைச் சேனை அகதி முகாம் | பொலிஸ் உத்தியோ கத்தர் | வாழைச் சேனை அகதி முகாம் | வீட்டு வேலைக்காக பலவந்தமாக தாயிடமிருந்து பெண்ணை கடத்திச் சென்றுள்ளார் | பொலிஸ் விசாரனை இடம்பெற்று வருகிறது |
| சூரியா | 03.04.2002 | 21 | திமிலைதீவு | சுதந்திர மனித உரிமைக் கழகத்தில் பணிபுரியும் நபர் | வேலைத் தளத்தில் | மனித உரி மைக்காக பணி புரியும் இந் நபர் இப் பெண்னுக்கு வேலை எடுத்துத் தருவதாகக் கூறி கொழும்புக்குக் கடத்திச் சென்றுஒரு மாத காலமாக மறைத்து வைத்து ள்ளார். பின் இப் பெண் கண்டு பிடிக்கப்பட்டு தாய் தந்தையரிடம் ஒப்ப டைக்கப்பட்டார். | மட்/ பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டது |
| மட்/வைத்திய சாலை | 03.04.2002 | 32 | அரசடி மட்டக்களப்பு | கணவர் | வீட்டில் | மத்திய கிழக்கு நாட்டுக்குச் சென்று திரும்பிய இப் பெண்ணை அவர் கணவர் தினமும் பிரச்சனை க்குட்படுத்தி நெருப்பு வைத்து கொலை செய்து ள்ளார். இப்பெண் இறக்கும் போது கொடுத்த வாக்கு மூலத்தில் தன்னை கணவன் எரித்ததாகக் கூறியுள்ளார். | சம்பந்தப் பட்ட நபர் கைது செய்யப்பட்டு ள்ளார். வழக்கு இடம் பெறுகிறது. |
| மட்/வைத்திய சாலை | 18.03.2002 | 28 | மட்டிக்கழி | கணவன் | வீட்டில் | கணவன் கர்ப்பினியாக இருக்கும் இப் பெண் ணை தினமும் துன் புறுத்துத்தியதுடன் மனைவி கர்ப்பினி யாக இருக்கும் போது வீட்டைவிட்டு துரத்தியும் உள்ளார் | வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரணை இடம் பெறுகிறது |

www.tamilarangam.net

## பெண்களுக்கெதிரான வன்முறைகள் - 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்/வைத்தி யசாலை | 14.08.2002 | - | மட்டக்களப்பு | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் அடித்து துன்புறுத்தி காயப்படுத்தியதால் மனைவி, தனக்குத் தானே நெருப்பூட்டி தற்கொலை முயற்சி யில் ஈடுபட்டுள்ளார். | வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் |
| அந்தக் கிராமத்து மக்கள் மூலம் | 03.10.2003 | 26 | திராய்மடு | கணவன் மேகராஜா | வீட்டில் | கணவன் தினமும் சித்திரவதை செய்து துன்புறுத்தியதுடன் மனைவியை அவரது உறவினர்களோடு தொடர்பு கொள்ள விடாமல் தடுத்துள்ளார் இதனால் மனைவி இரவு 11மணியள வில் தூக்குப்போட்டு இறந்துள்ளார். இது கொலையா தற்கொலையா என தீர்மானிக்க முடியாதுள்ளது. | பொலிஸ் விசாரனை இடம்பெற்று வருகிறது |

# 'வன்முறைகளற்ற சமாதானம் வேண்டும்'



சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதன் அர்த்தத்தை முதலில் சட்டத்திற்கே புரிந்து கொள்ள முடியாதுள்ளது. வன்முறைகளற்ற சமுதாயமும், சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பதும் இருவேறு நிலையுடையவைகளல்ல.

இன்று சமுதாயத்தில் நிலவும் இருவேறு சூழலிலும் எந்தவிதமான தராதர வேறுபாடுகளின்றியும் பெண்ணுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்த வண்ணமுள்ளன. ஆனால் மறுபடியும் மறுபடியும் சட்டத்தின் தாரக மந்திரமாய் சட்டத்தின் முன் யாவரும் சமம் என்பது ஒலித்த வண்ணமுள்ளது. அதுபோலவே காலம் காலமாக பெண்களுக்கு எதிரான வன்முறைகளும். அதற்குரிய குரல்களும் 25 வருடகால யுத்தத்தின் பின்னரான 'சமாதானச்சூழலில்' பொதுமைப்படுத்தப் பட்டுள்ளது. பால்பேதமின்றி சமாதானம். அதன் தோற்றம் மீதான கவன ஈர்ப்பில் நெகிழ்ந்து நின்றவண்ணமுள்ள சூழலில் வன்முறைகள் குறித்த சட்டத்தின் நிலை கேள்விக்குரியதாக இருக்கின்றதா? என எண்ணத் தோன்றுகின்றது.

'சமாதானம்' என்பதனை சமுதாயத்தின் நாடடின் அனைவருக்கும் உரியதாக்குதல் ஒன்றே அதன் உண்மையைத் தீர்மானிப்பதாக அர்த்தப்படுவதாக அமையும். வன்முறைகள் ஒருபுறம் சமாதானத்தின் குரல் ஒருபுறம் நிகழ, சட்டத்தின் குரலின் திசை தெரியவில்லை. சமாதானம் என்பது பெண்மைக்கும் உரிய தெனின் எமக்கு வன்முறைகளற்ற சமாதானம் ஒன்றே வேண்டி யுள்ளது. பெண்களும் நீண்டகாலமாக அதனையே வேண்டி நிற்கின்றனர் என்பதைக் குறிப்பிடுதல் நலம்.

T. உருத்திரா

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| அந்த ஊர் இளைஞர்கள் மூலம் | 24.09.2003 | 11 | கல்முனை | விடுதிக்குப் பொறுப்பானவர் (பாஸ்டர்) | நாவலடி நல்லாசியார் இல்லம் | பாஸ்டர் சிறுமியை அடித்து சித்திரவதை செய்ததுடன் பாலியல் துஸ்பிரயோகம் செய்துள்ளார் | மட். நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது |
| சூரியா | 24.09.2002 | 15 | மாவடிவேம்பு | கமலேந்திரன் சமூர்த்தி உத்தியோகத்தர் | வீட்டில் | இச்சிறுமி தனது பாட்டியாருடன் வாழ்ந்து வந்தார். சம்பவம் நடந்த தினம் பாட்டியார் வீட்டில் இருக்க வில்லை தனிமையில் இருந்த இச் சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கிய குற்றவாளி, பின் சிறுமியின் கழுத்தை வெட்டிக் கொலை செய்துள்ளார் | வழக்கு விசாரணை நடந்து வருகிறது சந்தேக நபர் விளக்க மறியலில் வைக்கப்பட் டுள்ளார் |
| கிராமத்து இளைஞர் மூலம் | 26.08.2002 | 11 | உன்னிச்சை | P. வாஸ் ஆசிரியர் | சூரியா லேன் மட்டக்களப்பு | ஆசிரியரான P. வாஸ், வீட்டில் வேலைக்கு இருந்த சிறுமி மீது பாலியல் வன்முறை செய்துள்ளார் | மட் நீதிமன்றில் வழக்கு விசாரனை இடம் பெற்று வருகின்றது |
| சூரியா | 03.03.2002 | 16 | மட்டக்களப்பு | காதலன் | மட்டக்களப்பு | அயல்வீட்டு நபர் கடத்திச் சென்றமை | |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 22.04.2003 | 16 | கிரான் | அயல் வீட்டு நபர் பத்மநாதன் | கிரான் | வயல் வேலைக்கு சென்று கொண்டி ருந்த இப்பெண்ணை குற்றவாளி, திருமணம் முடிப்ப தாகக்கூறி கர்ப் பினியாக்கியுள்ளார். குழந்தை பிறந் தவுடன் குற்றவாளி ஓடி மறைந்துள்ளார் | பொலிஸ் விசாரனை இடம்பெற்று வருகிறது |
| சூரியா | 26.08.2002 | 16 | கோயில் குளம் | மாமனார் | சின்னம்மா வீட்டில் | பருவமடைவதற்கு முன்னரே குற்றவாளி இச் சிறுமி மீது பாலியல் உறவு கொண்டு வந்துள்ளார் இதன் காரணமாக சிறுமிகர்ப்பினியாக்கப் பட்டு குழந்தை பெற்று ள்ளார் தற்போது குற்றவாளி மறைந்துள்ளார் | குழந்தைக்கு பதிவு செய் வதற்கான முயற்சிகள் மேற்கொள்ள ப்படுகின்றன |
| மட்/ வைத்தி யசாலை | 10.04.2002 | 17 | ஏறாவூர் | சித்தப்பா | சித்தியின் வீட்டில் | சித்தியின் வீட்டில் தங்கியிருந்த போது குற்றவாளி இரவு நேரங்களில் பாலியல் வல்லுறவு கொண்டுள்ளார் சிறுமி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார் | வழக்குப் பதிவு செய்யப்பட்டு விசாரனை நடை பெறுகிறது |
| மட்/ வைத்தி யசாலை | 09.05.2002 | 13 | திருக்கோயில் | கணவர் மோகன் | வீட்டில் | பாடசாலையிலிருந்து இடைநிறுத்தப்பட்டு பலவந்தமாக திருமணம் செய்து கொடுக்கப்பட்டுள்ளார் கணவன், தினமும் அடித்துத் துன்புறுத்தியுள்ளார் | சிறுவர் விடுதியில் விடப்பட்டு கல்வி பயில்கிறார் |
| நீதிமன்றம் மூலம் | 05.04.2002 | 06 | மூதூர் | சித்தப்பா சிவானந்த ராஜா | சித்தப்பா வின் வீட்டில் கல்லடி | சிறுமியை தினமும் சித்தப்பா அடித்து துன்புறுத்தியதுடன் பாலியல் வல்லுற வுக்கும் உள்ளாக் கியுள்ளார் சிறுமி பாடசாலைக்குச் செல்லும் போது இரத்தக்காயங்கள் இருந்ததை ஆசிரியர்கள் கண்டனர் | சிறுமியை பெற்றாரிடம் ஒப்படைத் துடன் சிறு வர் நன் நடத்தைப் பிரிவினர் கவனம் எடுக்கின்றனர் சந்தேகநபர் கைதுசெய் யப்பட்டுள்ளார் |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 18.03.2002 | 13 | முறக்கொட் டான் சேனை | அயல் வீட்டு பிரேம்நாத் | திராய்மடு காட்டுக்குள் | சிறுமி, பாடசாலை முடிந்து டியுச னுக்குச் செல்லும் போது குறிப்பிட்ட நபர் கைக்கிளில் ஏற்றிச் செல்வ தாகக் கூறி சிறுமியை காட் டுக்குள் கொண்டு சென்று பாலியல் வல்லுறவுக்கு உட் படுத்தியுள்ளார் | வழக்கு பதிவு செய் யப்பட்டு மேல் நீதி மன்றத்தில் விசாரணை நடந்து வருகிறது |
| மட். வைத்திய சாலை | 03.04.2002 | 13 | ஆரையம்பதி | தர்மரெட்ணம் 52 வயது கடைமுதலாளி | கடைக்குள் | கடைக்குச் சாமான் வாங்கச் சென்ற போது குற்றாவளி சிறுமியை கடைக்குள் இழுத்துச் சென்று பாலியல் வல்லுற வுக்குட்படுத்தியுள்ளார் | மட். நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்து வருகிறது. |
| சூரியா | 08.03.2002 | 18 | ஆரையம்பதி | கிழக்குப் பல்கலைக் கழக மாணவன் | குற்றம் சாட்டப்பட் டவர் வீட்டில் | பாடசாலை மாணவியான இவருடன் குற்றவாளி உடல் உறவு கொண்டதன் மூலம் கர்ப்பினி யாக்கப்பட்டார் பின்னர் சட்டவி ரோதமாக கருக்கலைப்பு இடம் பெற்றுள்ளது | வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் |
| மட். வைத்திய சாலை | 11.02.2002 | 13 | திருக்கோயில் | அக்காவின் கணவர் சசிக்குமார். | அக்காவின் வீட்டில் திருக் கோயில் | தாய் மத்திய கிழக்கு நாட்டுக்கு வேலைக்குச் சென்ற போது அக்காவின் வீட்டில் வாழ்ந்து வந்த சிறுமியை அக்காவின் கணவர் தாக்கியுள்ளார் | வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 14.09.2002 | 16 | கொக்குவில் | ஆசிரியர் பயிற்ச்சிக் கலாசாலை மாணவன் ஜெயரூபன். | சிறுமியின் வீட்டில் | திருமணம் முடிப்பதாகக் கூறி, குற்றவாளி சிறுமியுடன் பாலியல் உறவு மேற் கொண்டுள்ளார் இதனால் சிறுமி கற்பமடைந்து குழந்தை பெற்றுள்ளார் எனினும் குழந்தைக்கு தான் தந்தை இல்லையென குற்றவாளி மறுக்கிறார். | வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரனை இடம் பெறுகிறது. DNA பரிசோதனைக்கு கட்டளையிடப்பட்டுள்ளது |
| சூரியா | 18.11.2002 | 14 | முகத்துவாரம் | தந்தை | அவரது வீட்டில் | தாய் மத்திய கிழக்கு நாடொன்றிக்குச் சென்ற போது தந்தை தினமும் மகளுக்கு இரவில் நித்திரை மாத்திரை கொடுத்து பாலியல் உறவு செய்துள்ளார் | சிறுமி விடுதி யொன்றில் பாதுகாப்பாக உள்ளார் |
| சூரியா | 08.09.2002 | 15 | மட்டக்களப்பு | தந்தை | அவரது வீட்டில் | சிறுமி அயல்வீட்டு நபரைக் காதலித்ததன் காரணமாக தந்தை தினமும் கொடுமைப்படுத்தியதுடன் பாலியல் வல்லுறவுக்குள் ளாக்கியுள்ளார். இதனால் தனது காதலனுடன் வீட்டைவிட்டு ஓடியுள்ளார். | மட். நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு விசாரனை மேற்கொள் ளப்பட்டு வருகின்றது. சிறுமி பெற்றாரிடம் உள்ளார் |
| மட். வைத்திய சாலை | 18.12.2002 | 14 | களுதாவளை | அக்காவின் கணவர் தெய்வேந்திரன் | பக்கத் திலுள்ள காட்டுப் பகுதியில் | அக்காவின் கணவர் சிறுமியை காட்டுக்குள் அழைத்துச் சென்று பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியுள்ளார் | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டது. வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட். வைத்திய சாலை | 26.07.200 | 11 | தும்பங்கேணி | துசிகரன் | பழுகாமம் பற்றைக் காட்டுக்குள் | ஒன்று விட்ட சகோதரனான துசிகரன். சிறுமி கோயிலுக்கு சென்று வீடு திரும்பும் போது சைக்கிளில் ஏற்றிச் சென்று பற்றைக் காட்டுக்குள் வைத்து பாலியல் வல்லுறவு புரிந்துள்ளார் சிறுமி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டு விசாரணை இடம் பெற்று வருகிறது |
| மட்.வைத்திய சாலை | 10.04.2002 | 17 | வாழைச்சேணை | அயல் வீட்டு நபரான பாறூக் 54வயது | அவரது வீட்டில் | சிறுமி தனியாக வீட்டில் இருந்த போது அயல் வீட்டு நபரான பாறூக், மயக்க மருந்தை குடிக்க கொடுத்து சிறுமியை பாலியல் வல்லுறவுக்குட் படுத்தியுள்ளார் | வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளி கைது செய்யப் பட்டார் |
| மட்.வைத்திய சாலை | 07.08.2002 | 10 | கல்முனை | வீட்டு முதலாளி | வீட்டில் | பாடசாலைக்கு செல்வதில் இருந்து நிறுத்தப்பட்ட சிறுமி வீட்டு வேலைக்கு அமர்தப்பட்டுள்ளார். அங்கு வீட்டு எஜமானியால் அடித்து துன்புறுத்தப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் | பொலிசா ரினால் விசாரணை மேற்கொள்ள ப்பட்டது. குற்றவாளி விளக்க மறியலில் |

www.tamilarangam.net

## சிறுமிகள் மீதான பாலியல்வல்லுறவு, முயற்சி, துன்புறுத்தல் – 2002

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்.வைத்திய சாலை | 01.11.2002 | 05 | காத்தான்குடி | கமீட் முகமட் 50வயது மதிக்கக் கூடிய கடை முதலாளி | காத்தான் குடி கடை ஒன்றில் | 50வயது மதிக்க கூடிய கடை முதலாளி, சிறுமி கடைக்கு சென்ற போது கைநிறைய இனிப்பைக் கொடுத்துவிட்டு பாலியல் வல்லுறவு புரிந்துள்ளார் சிறுமி உடல்நிலை பாதிக்கப்பட்டு மட். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார் | வழக்கு பதிவு செய்யப்பட்டு சந்தேகநபர் கைது செயயப் பட்டார் |
| ஊர்மக்கள் | 18.11.2002 | 16 | --- | பெரிய தந்தை 50வயது | வீட்டில் | சிறுமியின் தாய் மத்திய கிழக்கு நாடொன்றிக்குச் சென்றபோது சிறுமி பெரியம்மா வீட்டில் தங்கியிருந்தார். சிறுமி பெரியம்மாவின் கணவனால் தொடர்சியாக பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக் கியுள்ளார். இதனால் கர்ப்பிணியான சிறுமி குழந்தை பெற்றுள்ளார் | எதிராளி 20000ரூபா பிணையில் விடுவிக்கப் பட்டார் வழக்கு விசாரணை இடம் பெற்று வருகிறது |

### மொட்டுக்கள் மலரட்டும் .....

தோழி......
பூக்கள் மலரும்
பொழுதுகளில் - நாம்
போர்க்களம் சென்றோம்
மொட்டுக்களைக் காக்க
கண்முடி இளைப்பாறும்
நேரம் - நம்
கிளைகள் ஒடிக்கப்பட்டது.

கிளை முழுதும் தளிர்கள்
கொழுத்தும் வெயிலில்
கருகிச்செத்தன - நம்
காலடியில்.
கூவாத குயில்கள்
பறந்துவிட்டன
பருந்துகளின் பார்வைக்குப்
பயந்து

நிலவு கூட
மண்ணைத் தொடவில்லை
உயிர் சுடும் இரவுகளில்
குளிர் இல்லை
உறைந்துவிட்ட நெஞ்சுடன்
போர்க்களம் செல்வோம்
விடிகாலைப் பொழுதில்
திரும்பும் உறுதியுடன்.

விஜயலக்ஷ்மி சேகர்

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட். வைத்திய சாலை | 05.03.2003 | 27 | ஆயித்திய மலை | மட். வைத் தியசாலை வைத்தியர்கள் | மட். வைத்திய சாலை | 10மாத கர்ப்பிணியாக மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பெண், குழந்தை பிறந்து நாலாம் நாள் காய்ச்சல் காரணமாக திடீர் மரணமானார். வைத்திய பரிசோதனையில் பெண்ணின் வயிற்றில் கட்டி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. இது மருத்துவரின் கவலையீனம் என கூறப்படுகின்றது | |
| சூரியா | 30.04.2003 | 25 | சத்துருக் கொண்டான் | கணவன் ஜேசுதாசன் | வீட்டில் | கணவன் மதுபாவித்துவிட்டு இப்பெண்ணை சித்திரவதைப் படுத்தியதுடன்,வேறு பெண்ணையும் மறு திருமணம் முடித்துள்ளார் | |
| சூரியா | 14.03.2003 | 48 | காத்தான்குடி | இனந் தெரியாத குழு | வீட்டில் | இரவு நேரத்தில் தனியாகத் தங்கியிருந்த பெண் இனந் தெரியா தோரால் பனை மட்டை, சைக்கிள் செயின், எஸ்லோன் குளாய் போன்ற வற்றால் கடுமையாகத் தாக்கப்பட்டு மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுள்ளார் | |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட். வைத்திய சாலை | 31.03.2003 | 22 | ஏறாவூர் | தந்தை | வீட்டில் | தந்தையினால் சித்திரவதைக்கும் பாலியல் வல்லுறவுக்கும் உள்ளாக்கப்பட்ட இப் பெண் 3மாதக் கர்ப்பினியாய் உள்ளார் | வழக்கு விசாரனை நடைபெற்று வருகின்றன. |
| சூரியா | 16.01.2003 | 37 | கல்முனை | வைத்தியர் | வைத்திய சாலையில் | 7மாதக்கர்பணியாக மட்.வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு சிகிச்சை பெற்ற பெண் திடீரென வைத்தியரின் தவறான சிகிச்சை காரணமாக இறத்துள்ளார் (குழந்தை உட்பட) | மட். நீதி மன்றில் வழக்கு நடைபெறுகின்றது. |
| சூரியா | 25.05.2003 | 25 | நாவற்குடா | கணவன் | கண்டி | இப் பெண் வீட்டுவேலைக்கு இருந்த இடத்தில் திருமணம் முடித்துக் கொடுக்கப்பட்டார். தினமும் கணவன் சித்திரவதைப் படுத்தியமையால் பிள்ளைகளுடன் கணவனை விட்டுப் பிரிந்துள்ளார். | |
| சூரியா | 19.06.2002 | 31 | கூழாவடி | கணவன் நிமால் | வீட்டில் | குடித்துவிட்டு கணவன் மனைவியை தினமும் சித்திரவதைப்படுத்தியுள்ளார். எனினும் பொலிஸ் இவர்களை சமாதானப்படுத்தி அனுப்பி வைக்கின்றது. | மட். பொலிஸ் மூலம் சமாதானப் படுத்தி வைக்கப் பட்டனர். |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 21.05.2003 | 30 | புதூர் | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் சித்திரவதை செய்வதால்,மனைவி கணவனைப்பிரிந்து தனது பிள்ளைகளுடன் வாழ்கிறார் | வழக்கு விசாரனை நடைபெற்று வருகின்றது. |
| சூரியா | 19.05.2003 | 32 | ஆரையம்பதி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் மனைவியையும் பிள்ளைகளையும் அடித்துத் துன்புறுத்துகிறார் | காத்தான் குடி பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| சூரியா | 02.02.2003 | 33 | திருப் பெருந்துறை | செங்கலடி கிராமசேவகர் | வீட்டில் | இந்நபர் ஏற்கனவே திருமணம் முடித்துள்ளார் பிள்ளைகளும் உள்ளது. எனினும் உண்மையை மறைத்து இப்பெண்னை திருமணம் முடிப்பதாகக் கூறி உறவு கொண்டு இப் பெண்ணை கர்ப்பிணியாக்கியுள்ளார் | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| மட்.வைத்திய சாலை | 31.03.2003 | 22 | ஏறாவூர் | தந்நை | வீட்டில் | இப் பெண்னை தந்தை தினமும் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தி 3மாதக்கர்ப்பிணி யாக்கியுள்ளார் | வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் பொலிஸ் விசாரனை செய்யப்பட்டு வழக்குத் தொடரப் படுகிறது |
| I.C.R மூலம் | 24.02.2003 | 37 | முகத்துவாரம் | கணவர் அமிர்தலிங்கம் | வீட்டில் | கணவன் வீடு கட்டித்தருமாறு மனைவியை அடித்து துன்புறுத்தி வீட்டை விட்டு துரத்தியுள்ளார் | மட். பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| காத்தான்குடி | 20.02.2003 | 21 | மன்முனை | கணவன் தர்மலிங்கம் | வீட்டில் | கணவன், வீடு கட்டித்தருமாறு மனைவியை அடித்து துன்புறுத்தி வீட்டை விட்டு துரத்தியுள்ளார். | காத்தான் குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது |
| சூரியா | 28.03.2003 | 28 | மட்டக்களப்புப் புதுநகர் | கணவன் வோல்டர் | வீட்டில் | கணவன் மனைவியை தொடர்ச்சியாக சந்தேகப்படுவதுடன் அடித்து சித்திரவதைப்படுத்தியுள்ளார் மனைவியின் தங்கையை திருமணம் முடித்துத்தருமாறும் வற்புறுத்தியுள்ளார் | |
| சூரியா | 12.03.2003 | 36 | புன்னச் சோலை | கணவன் ரவீந்திரராஜா | வீட்டில் | தினமும் கணவனால் தாக்கப்பட்டதுடன் மனைவியின் உடமைகள் அழிக்கப்பட்டன | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது |
| சூரியா | 11.03.2003 | 42 | பெரிய ஊறணி | கணவன் | வீட்டில் | கணவன் மனைவியை சந்தேகப்பட்டு சித்திரவதை செய்துள்ளார் | ----- |
| சூரியா | 20.02.2003 | 21 | திருப்பெருந் துறை | கணவன் | வீட்டில் | இப் பெண் கணவனால் துன்புறுத்தப் பட்டதுடன். இவரது பணமும் கணவனால் பறிமுதலுக்குள்ளானது | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| சூரியா | 20.02.2003 | 37 | புன்னச்சோலை | கணவன் சிவஞானம் | வீட்டில் | கணவன், மனைவியை தினமும் கொடுமைப் படுத்துவதுடன் வீட்டையும் எரித்துள்ளார் மனைவியையும் பிள்ளையையும் வீட்டைவிட்டு துரத்தியுமுள்ளார் | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| சூரியா | 22.01.2003 | 48 | பெரிய ஊறனி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் குடித்துவிட்டு மனைவியை சித்திரவதைப் படுத்தியுள்ளார் | |
| சூரியா | 06.01.2003 | 34 | பெரிய ஊறனி | கணவன் | வீட்டில் | திருமணம் முடித்து 4 வருடங்களாகியும் இப் பெண்ணிற்கு குழந்தை பிறக்காததால் இப் பெண்ணை, கணவன் தினமும் அடித்து சித்திர வதைப் படுத்துகிறார் | பொலிசில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது |
| சூரியா | 28.07.2003 | 42 | நாவற்குடா | கணவன் நவரெட்ண ராஜா | வீட்டில் | கணவன் தினமும் அடித்துத் துன்புறுத்துவதுடன் கணவன் வீட்டை விட்டு வெளியேறி வேறு திருமணம் முடித்துள்ளார். | கிறிஸ்தவ இணக்க சபையினால் விசாரனை இடம் பெறுகிறுது |
| சூரியா | 26.06.2003 | 28 | புதுக்குடியிருப்பு | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் சித்திரைவதை செய்துள்ளர் | வழக்கு பதிவு செய்யப்பட் டுள்ளது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| கொய்நோனியா | 23.05.2003 | 28 | ஏறாவூர் | கணவன் சிவகுமார் | வீட்டில் | கணவன் அடித்ததனால் தலை உடைந்து ஏறாவூர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 01.09.2003 | 30 | களுவாஞ் சிக்குடி | கணவன் தேவதர்சன் | வீட்டில் | கணவன் தொடர்ந்து மது பாவித்துவிட்டுப் பொருட்களை விற்றதுடன் மனை வியைச் சித்திர வதை செய்துள்ளார் | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| யுனிசெப் | 07.08.2003 | 34 | பெரிய கல்லாறு | கணவன் ஜீவாகரன் | வீட்டில் | கணவன் மது பாவித்துவிட்டு மனைவியையும், பிள்ளைகளையும் அடித்துள்ளார். | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 14.08.2003 | 27 | கருவப்பங் கேணி | கணவன் | வீட்டில் | கணவன் தினமும் சித்திரவதை செய்துள்ளார். | விவாகரத்து வழக்கு பதிவு செய்யப் பட்டது |
| சூரியா | 17.06.2003 | 35 | சின்ன ஊரணி | கணவன் கிருஸ்ண மூர்த்தி | வீட்டில் | கணவன் அடித்துச் சித்திரவதை செய்துள்ளார். | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. |
| சூரியா | 10.01.2003 | 36 | திமிலை தீவு | கணவன் | வீட்டில் | கணவன் அடித்துச் சித்திரவதைப் படுத்தி பிள்ளை களையும் மனைவி யையும் துரத்தி யுள்ளார். | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 13.01.2003 | 37 | திராய்மடு | கணவன் ஓம்பிரகாஸ் | வீட்டில் | கணவன் மது பாவித்துவிட்டு தினமும் மனை வியை தாக்கியு ள்ளார் | வழக்கு பதிவு செய்யப் பட்டுள்ளது |

www.tamilarangam.net

# பெண்களுக்கெதிரான வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட். வைத்தி யசாலை | 21.01.2003 | 36 | ஆரையம்பதி | கணவன் | வீட்டில் | கணவன், கூரிய ஆயுதங்களால் தாக்கியதால் மனைவி வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 22.01.2003 | 23 | ஆரையம்பதி | கணவன் | வீட்டில் | கணவனால் துன்புறுத்தப்பட்டார் | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 29.01.2003 | 34 | பெரிய ஊரணி | கணவன் நிரஞ்சன் | வீட்டில் | கணவனால் அடித்துத் துன்புறுத் தப்பட்டார். தற் போது கணவர் வேறு திருமணம் முடித்துள்ளார். | |
| சூரியா | 18.07.2003 | 34 | கல்லடி | கணவன் ஜெயராஜா | வீட்டில் | கணவனால் தாக்கப்பட்டுள்ளார் தற்போது கணவன் வேறு திருமணம் முடித்துள்ளார். | பொலிசில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது. |
| சூரியா | 02.06.2003 | 40 | ஆரையம்பதி | கணவன் | வீட்டில் | கணவன் மது பாவித்துவிட்டு மனைவியை தாக்கியுள்ளார் காத்தான்குடி பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்தி பெண்கள் குழு

எமது சமூகத்தில் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஒரு பிரச்சினையாக இனம் காணப்படாத நிலையில் இன்று பெண்கள், சமூகத்தில் பல சவால்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எமது நிறுவனமான சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தில் சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டமானது பெண்ணின் உரிமைகளை உறுதிப்படுத்துவதுடன், பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு சட்ட நடவடிக்கை எடுப்பதும், பாரபட்சமற்ற வன்முறை களில்லாத சமத்துவமான சமுதாயத்தை உருவாக்குவதனையும் நோக்காக கொண்டு செயற்படுகின்றது.

இதற்கமைய,சட்ட உதவி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், பெண்களுக்கு சட்ட உதவிகள், ஆலோசனைகள் வழங்குதல், உளநல உதவிகள் வழங்குதல் பயிற்சிக் கருத்தரங்குகள் நடாத்துதல், விழிப்புணர்வு ஊட்டக்கூடிய செயலமர்வுகளை நடாத்துதல் போன்றவற்றை செயற்பாடுகளாக உடையது சட்ட உதவி நிகழ்ச்சித் திட்டமாகும். இந்தவகையில் சமூகத்தில் கெண்களுக்கு எதிரான வன்முறைகளான பெண்களுக்கு எதிரான பாலியல் வல்லுறவுகள், (இராணுவம் உட்பட சமூகத்தின் சகல தரப்பினரும்) சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம், கணவன்மாரால் கைவிடப்படுதல், கொலை, கடத்தல், சொத்துப் பிரச்சினை, மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக செல்வோர் எதிர்கொள்ளும் பிரச்சினை, சிறுமிகள் வீட்டு வேலைக்கு அமர்த்தப்படல், குழந்தைத் திருமணத்திற்கு முன்னர் கருவுற்றல் போன்ற பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எமது நிறுவனத்திற்கு முறைப்பாடுகளாக கொண்டுவரப்பட்ட நிலையில் - இவற்றில் பாரியளவு பிரச்சினைகளை எதிர்கொண்ட பெண்களுக்கு உதவும் முகமாக பாதிக்கப்பட்டு நீதிக்காக நின்ற பெண்களை ஒன்றிணைத்து, 1998ம் ஆண்டு சக்திக்குழு உருவாக்கப்பட்டது.

இச்சக்திக் குழுவில், மொத்தமாக 25பேர் அங்கத்துவம் வகிக்கின்றனர். பல்வேறு வகையான பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து, சவால்களை எதிர்கொண்டு சமுதாயத்தில் இன்னும் வாழ்க்கையின் மீது நம்பிக்கை கொண்டிருக்கும் பெண்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்ட அமைப்பாக சக்தி குழு காணப்படுகின்றது. மாதாந்த கூட்டத்தில் பங்குபற்றல், சட்ட உதவித் திட்டத்தின் படியான வேலைத்திட்டங்களில் பங்கெடுத்தல், வலுவூட்டல் பெறல் பிரச்சினைகளை பகிர்தல் போன்றன சக்தி குழுவின் பணியாக உள்ளது.

இந்த வகையில் பின்வரும் செயற்பாடுகளில் பங்குகொள்வதனை உதாரணமாக குறிப்பிடலாம். பயிற்சி



கருத்தரங்குகளாக திருமணச் சட்டம், விவாகரத்து சட்டம், சிறுவர் உரிமை, பெண்கள் உரிமை, பிரச்சினைகள் சம்பந்தமான பயிற்சிப்பட்டறை, உளவள கருத்தரங்குகளில் கலந்து கொள்ளல், இவை தவிர "ஒத்த நோக்கங்களை" உடைய ஏனைய நிறுவனங்களின் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளத்தக்க வாய்ப்பை பெறல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

இத்தகைய பின்னணியில், சக்திக்குழுவினரின் போக்கினை நோக்கும் போது சூரியாவின் ஏனைய நிகழ்ச்சிகளில் பங்கு கொள்ளல் (சர்வதேச பெண்கள் தினம், ஒன்றுகூடல்) அதற்குரிய ஆதரவினை வழங்குதல், தொழிற்கல்வியை பெறுவதற்கு முன்வந்துள்ளமை, சேமிப்பு திட்டங்களுக்கு ஆதரவளித்தல், ஏனைய வங்கி போன்ற அமைப்புகளில் கடனை பெறுவதற்கான நடவடிக்கையில் சுயமாக ஈடுபடுதல் ஆகியவற்றோடு அவரவர் கிராமங்களில் சிறு சிறு சுயதொழில் முயற்சியில் ஈடுபடுதல், பெண்களுக்கு எதிரான வன்முறைகளை குறைக்கக்கூடிய கலந்துரையாடலில் ஈடுபடுதல் போன்றவற்றில் ஈடுபட்டு வருவது, உண்மையிலேயே சக்திகுழு அடைந்துள்ள வளர்ச்சியே என்பது மிகையல்ல. இரண்டாம் சாதியாக கணிக்கப்பட்டு, வன்முறைகளை எதிர்கொண்ட வேளையிலும், சமுதாயத்தின் முன்னே வந்து, இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான மனோவலுவினை பெற்று வருதல் என்பது நிகழ்ச்சி செயன்முறைகளின் சாதகமான நிலையே எனலாம்.

எனவே இத்தகைய பெண்களின் குழுக்கள் தமது மனோதிடத்தினை வலுப்படுத்தி வாழ்க்கையில் ஒரு ஸ்திர நிலையைப் பெறவும், பொருளாதார அறிவியல் ரீதியாக தத்தமது எல்லைகளை விரிவுபடுத்தவும் முயல்வதும், பூரணமான ஆளுமையுடையவர்களாக தம்மை மாற்ற முயல்வதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும் என்பதோடு, சமூகத்தில் பின்தங்கி, ஒதுங்கியிருக்க முற்படும் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாகவும், துணைக் கோலாகவும் இருக்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமுமில்லை எனலாம்.

www.tamilarangam.net

# வஞ்சகர் வாழும் பூமி



சின்ன மகளே - இனி
சிணுங்கி அழாதே - பிறர்
சொல்வதை நம்பி
சொக்கிப் போகாதே.

நிலைமாறும் உலகில்
தடுமாறும் உள்ளம்
பெற்ற பிள்ளையையும்
காசாக்கும்
கயவர் கூட்டம்

மந்திரத்தால்
மகுடி ஊதி
தந்திரத்தால் தங்கம்
பறிக்கும்
உள்ளொன்று வைத்து
புறமொன்று பேசி
உறக்கத்தில்
கழுத்தறுக்கும்
குள்ள நரிக் கூட்டம்
பாரினில் காரியம்
தலைவிரித்தாடும்
காரியம் சாதிக்க
கண்டதையும் விற்குது

பிள்ளை ரதி மகளே - என்
பேர் சொல்லும் பைங்கிளியே
கொள்ளைப் பிரியம் போல்
பாசாங்கு காட்டி
வெள்ளையடித்துள்ளதை
மோசம் செய்யும்
பச்சோந்திக் கூட்டம்.

நாளு வார்த்தை
நயமாய் பேசி
நாடி நரம்பையும்
அறுப்பவர் பலர்.
நீ முழுமையாய் நம்பிடாதே
மொத்தமாய் உன்னை
அறுத்திடுவர் பலர்.

பொய் புரட்டு பித்தலாட்டம்
வாய் ஜாலம்
வஞ்சகப் புகழ்ச்சிகளினால்
துஷ்டன் துரியோதனையும்
மிஞ்சிய துரோகிகள்
நட்புடன் பழகி
நயமாய் பேசி
துரோகம் இழைத்த

துப்பிரிகை
பிறருக்கு வெட்டிய குழியில்
தாமே விழுவர்.

வைரத்தால் வைரம்
அறுபடுவது போல
இந்த வஞ்சக நெஞ்சத்தார்
தன் வண்மத்தால் ஓர் நாளில்
நொருங்கியே போவர்

போட்டி பொறாமை
தற்புகழ்ச்சி தலைக்கணம்
தவிடு பொடியாகும்.
அதனால் சின்ன மகளே - நீ
சிணுங்கி அழாதே
பிறர் சொல்வதைக் கேட்டு
சொக்கிப் போகாதே.

தாரிகா மர்ஸூக்
குருணாகல்.

## சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட். வைத்தி யசாலை | 11.01.2003 | 15 | நாவற்குடா | அயல் வீட்டு நபர் | தேவால யத்திற்கு அருகா மையில் | வெளிநாடு சென்று திரும்பும் போது காதலிப்பதாகக் கூறி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளார் பின் இச்சிறுமி தேவாலயத்திற்கரு காமையில் மயக்க நிலையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளார் | மட். வைத்தி யசாலையில் சிகிச்சை பெற்றார். |
| சூரியா | 22.05.2003 | 16 | இருதயபுரம் | அண்ணன் முறையான தயாளன் | வீட்டில் | இச்சிறுமி அண்ணனினால் கடத்தப்பட்டு பாலியல் துஸ்பிரயோகத் திற்குள்ளாக்கப் பட்டுள்ளார். | சந்தேக நபர் கைது செய்யப் பட்டுள்ளார் |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| கிராம மக்களால் | 05.08.2003 | 16 | இருதயபுரம் | அயல்வீட்டு நபர்களான ஜெகன், நிமால் கார்த்திக் பண்டா | ஜெகன் என்பவர் வீட்டில் | இரவு 12மணியளவில் இருதயபுரம் காளிகோயிலில் இருந்த சிறுமியை தாய்க்கு சுகயீனம் எனக் கூறி மோட்டார் சைக்கிளில் ஏற்றிச் சென்று இரவு முழுவதும் குற்றவாளிகள் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கியுள்ளனர் | மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார். சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளார் |
| மட். வைத் தியசாலை | 24.06.2003 | 17 | வாழைச் சேனை | தந்தை | வீட்டில் | இச்சிறுமி தந்தையினால் பாலியல் துஸ்பிர யோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| மட். வைத்திய சாலை | 11.06.2003 | 13 | ஏறாவூர் | அயல் வீட்டு நபர் | வீட்டில் | 50வயது மதிக்கத்தக்க நபரால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு சிறுமி மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் | மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் |
| மட்.வைத்திய சாலை | 22.04.2003 | 05 | துறை நீலா வணை | இனந் தெரியாத நபர் | றோட்டில் | இனம் தெரியாத நபரால் பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டார் | மட். வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றார் |

www.tamilarangam.net

# சிறுமிகள் மீதான பாலியல் வன்முறைகள் – 2003

| தகவல் | சம்பவம் முறைப்பாடு செய்யப்பட்ட திகதி | வயது | வசிப்பிடம் | குற்றம் சாட்டப் பட்டவர் | சம்பவம் நடந்த இடம் | சம்பவம் | பிரதி பலிப்பு |
|---|---|---|---|---|---|---|---|
| மட்.வைத்திய சாலை | 07.05.2003 | 15 | காயங்கேணி | அண்ணன் | வீட்டில் | அண்ணன் முறையான நபரினால் பாலியல் துஸ்பிரயோகத் திற்கு உள்ளாக்கப் பட்ட இச் சிறுமிக்கு குழந்தை கிடைத்துள்ளது | அண்ணன் முறை யானவரை திருமணம் முடித்து கொடுக்கப் பட்டுள்ளது |
| மட். வைத் தியசாலை | 23.03.2003 | 09 | புதிய காத்தன் குடி | 60வது வயது மதிக்கக்கூடிய | வழியில் இடை மறித்து | 60வயது மதிக் கத்தக்க நபர் காலை நேரத்தில் வழிமறித்து பாலியல் துஸ்பிர யோகம் செய்து ள்ளார். வழக்கு பதிவுசெய்யப் பட்டுள்ளது. | பராமரிப்பு வழக்கு பதிவு செய்யப் பட்டது. |
| சூரியா | 30.01.2003 | 17 | சந்திவெளி | இனந்தெரியாத நபர்களால் | ஆறுமுக த்தான் குடியி ருப்பு | ஆறுமுகத்தான் குடியிருப்பு வீடொன்றில் தங்கியிருந்த 17 வயது சிறுமி குடியிருப்பு பாடசாலைக்கு அருகாமையில் தலை வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் | மட். வைத்திய சாலையில் பிரேதபரி சோதனை நடை பெற்றது |

www.tamilarangam.net

# வழக்குகளும் கேள்விகளும்

கடந்த 98ம் ஆண்டு தாய் மத்திய கிழக்கு நாடு ஒன்றிற்கு வேலை வாய்ப்புக்காகச் சென்றிருந்த போது அம்மம்மாவின் பராமரிப்பில் இருந்த 4 வயது சிறுமி தொடர்ச்சியாக தந்தையினால் பாலியல் துஸ்பிரயோகத்திக்குள்ளாக்கப்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்ட நிலையில் மட்டக்களப்பு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றார்.

இந்த வழக்கின் விசாரணை இடம் பெற்று 20000ரூபா பிணையில் குற்றவாளி விடுவிக்கப்பட்டார். எனினும் பாதிக் கப்பட்ட சிறுமி திரும்பவும் தந்தையின் பராமரிப்பில் இருந்ததுடன் பாடசாலைக்கு செல்வதில் இருந்து இடை நிறுத்தப்பட்டு சகோதரங்களை கவனிக்கும் வேலையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். மேலும் இச்சிறுமியின் வழக்கு 21/7/2003 மேல் நீதி மன்றில் முதலாவது விசாரனைக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கின் முக்கிய சாட்சியான சிறுமியின் அம்மம்மா திடீர் மரணமானார் இதுபற்றி அக்கிராம உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்படவில்லை. இவ்விடயம் தொடர்பாக அறிகின்றபோது தற்கொலை செய்துள்ளார் என கூறுகின்றனர். கொலையா, தற்கொலையா என்பதை உறுதிப்படுத்த விசாரணைகள் எதுவும் இடம்பெறாது உள்ளது.



இவ்வாறு சாட்சியங்கள் அழிக்கப்படும் இன்னொரு சம்பவம்.

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் திருமணம் முடிப்பதாக கூறி ஒரு பெண்ணுடன் உறவு வைத்திருந் தார். பெண் கர்ப்பம் தரித்தார். இதுதொடர்பாக சம்மந்தப் பட்டவரிடம் கூறியபோது மறுத்துள்ளார். இதன் காரண மாக மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றில் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 500,000/= நஸ்ட ஈடும் பிள்ளையின் பதிவை உறுதி செய்யவும் வழக்கு தொடரப்பட்டது. எனினும் 10.7.2002 அவ்வழக்கின் முதல் தவணை இருந்தது. 09.7.2002 அன்று அதிகாலை 2 மணியளவில் குற்றவாளி வீட்டினுள் புகுந்து குழந்தைக்கு நஞ்சு ஊசி ஏற்றி கொலை செய்தார். இதுசம்மந்தமாக சம்மந்தப்பட்ட பொலிசார் கைதுசெய்யப்பட்டு வேலையிலிருந்து விலக்கப்பட்டதுடன் வழக்கிலும் விசாரணைகள் உறுதி செய்யபட்டு வழக்கு சட்டமா காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டது இவ்வாறு குற்றம் செய்பவர்கள் தப்பித்துக் கொள்வதற்காக சாட்சியங்கள் கொலை செய்யப்படுகின்றன.



மட்டக்களப்பு நீதிமன்றில் வழக்குகள் தாமதிக்க கப்படுவதும் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் கைது செய்யப்படாமலும், வழக்குகள் விசாரிக்கப்படாமலும் இருப்பதனாலும் சம்பந்தப்பட்ட பெண்கள் மேலும் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர்.

உதாரணமாக புதுக்குடியிருப்பை சேர்ந்த 05 பிள்ளைகளின் தாயான பெண்ணொருவர் சுமார் 04 வருடங்களாக கணவனுக்குப் பயந்து பிள்ளைகளுடன் அயல் வீட்டில் ஒழிந்து வாழ்ந்து வருகின்றார். எதிராளியான கணவன் தொடர்ந்தும் அதே ஊரில் இருந்து கொண்டு சம்பந்தப்பட்ட பெண்ணை 03 தடவைகள் வீதியில் வைத்து கடுமையாக தாக்கியுள்ளார். பலத்த காயங்களுக்கு உள்ளாகிய இப்பெண் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றார். பின்னர் அவரது வீட்டையும் கணவர் எரித்துள்ளார். இவரது வழக்குகள் 03 பிரிவாக இடம் பெற்று வருகின்றது. எமது சமுதாயத்தில் பெண்கள் சட்டநடவடிக்கை எடுக்க முன்வருகின்ற போதும் அதற்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் ஏற்படும் தாமதம் பெண்களது உரிமைகள் முன்னுரிமைப் படுத்தப்படாமையையே காட்டுகின்றது.

பகிரங்க பிடியாணை பிறப்பிக்கப்பட்டு இதுவரையில் விசாரணைக்கு எடுக்கப்படாமல் உள்ள சில வழக்குகள் உதாரணமாக,

| | |
|---|---|
| 967 / M | 14 / 07 / 1999பகிரங்க பிடியாணை |
| 1588 / M | 15 / 12 / 2002 பகிரங்க பிடியாணை |
| 1031 / M | 16 / 05 / 2002 பகிரங்க பிடியாணை |
| 1472 / M | 14 / 02 / 2002 பகிரங்க பிடியாணை |

www.tamilarangam.net

# பெண்கள் மீதான வன்முறைகளை ஒழிப்பதற்கான செயல்வாதம் கார்த்திகை 25 - மார்கழி 10



முச்சக்கர வண்டியில் ஒலிபரப்பு

பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கு எதிரான செயல்வாத வாரம் கார்த்திகை மாதம் 25ஆம் திகதியில் இருந்து மார்கழி மாதம் 10 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது இவ் வாரத்தை முன்னிட்டு மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம் பின்வரும் நிகழ்வுகளை நடாத்தியது

**துண்டுப்பிரசுரம்** - பெண்களுக்கு எதிரான வன்முறைகள் இல்லாத சமூகத்தை உருவாக்குவோம்

பெண்கள் மீதான வன்முறைகளுக்கு எதிரான செய்வாத வாரத்தை முன்னிட்டு **"வன்முறைகள் இல்லாத வீடும் நாடும் எமக்கு வேண்டும்"** எனும் கருத்துக்களை உள்ளடக்கிய **செய்திப் பலகைகளை நடுதல்.**

முச்சக்கரவண்டியில், பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான **விழிப்புணர்வு சார்ந்த கருத்துக்களை ஒலிபரப்பு செய்தல்**

ஆகிய நிகழ்வுகளை பெண்களுக்கு இழைக்கப்படும் வன்முறைகளுக்கெதிரான தினமான கார்த்திகை 25- மார்கழி 10 வரையான காலங்களில் நடத்தியது



மட்/நீதி மன்றம் முன்னால் துண்டுப்பிரசுரம் வினியோகிக்கப்பட்டது



காத்தான்குடி பிரதேச செயலக வளாகத்தினுள் விளம்பரப்பலகை நடுதல்



ஆரம்ப நிகழ்வு சூரியா அலுவலகம்

**சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்**

**இல. 20, டயஸ் வீதி,**

**மட்டக்களப்பு**

**தொ.பே. - 065- 2223297**

முகவரி:- ..........................................

..........................................

..........................................

..........................................